### சிறப்பான நிதிநிலை அறிக்கை தாக்கல்: அடுத்த 2 மாதங்களில் இன்னும் வேகமாக வந்து பணியைத் தொடருவோம்!

# மீண்டும் வெல்வோம்! மீண்டும் ஆட்சி அமைப்போம்!

## சட்டப்பேரவையில் - சாதனைகளைச் சுட்டிக்காட்டி - அனைவருக்கும் நன்றி கூறி முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, பிப்.22-**

**சட்டப்பேரவையின் (16-வது பேரவை) எட்டாவது கூட்டத்தொடரின் நிறைவு நாளான நேற்று முன்தினம் (20.2.2026) நன்றி தெரிவித்து உரையாற்றிய முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், சிறப்பான இடைக்கால நிதிநிலை அறிக்கையினை தாக்கல் செய்திருக்கிறோம் எனவும், அடுத்த இரண்டு மாதங்களில் இன்னும் வேகமாக வந்து பணிகளைத் தொடர்வோம் - மீண்டும் வெல்வோம்! மீண்டும் ஆட்சி அமைப்போம் என கழக அரசின் சாதனைகளைச் சுட்டிக் காட்டியும், அனைவருக்கும் நன்றி தெரிவித்தும் தமது உரையில் குறிப் பிட்டார்.**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் (16-வது பேரவை) எட்டாவது கூட்டத்தொடரின் நிறைவு நாளான நேற்று முன்தினம் (20.2.2026) நன்றி தெரிவித்து உரையாற்றினார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் (16வது பேரவை) எட்டாவது கூட்டத் தொடரின் நிறைவு நாளான நேற்று முன்தினம் (20.2.2026) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நன்றி தெரிவித்து ஆற்றிய உரை வருமாறு:-

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 16ஆவது சட்டமன்றப் பேரவையின் எட்டாவது கூட்டத்தொடரின் நிறைவு நாளில் நாம் இங்கே ஒன்று கூடியுள்ளோம். கடந்த ஐந்தாண்டு காலத்தில் ஐந்து நிதிநிலை அறிக்கைகள் அளிக்கப் பெற்று, இந்த ஆண்டிற்கான இடைக் கால நிதிநிலை அறிக்கையும், வேளாண்மை இடைக்கால நிதிநிலை அறிக்கையும் வழங்கப்பட்டுள்ளன. அவற்றின் மீது சிறப்பான விவாதம், பதிலுரை வழங்கப் பெற்றுள்ளது. வேளாண் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களும், நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களும் சிறப்பான அறிக்கையையும், பதிலுரையையும் வழங்கியிருக்கிறார்கள். இதன் தொடர்ச்சியை, அடுத்த இரண்டு மாதத்தில் மீண்டும் வந்து, நிச்சயம், இன்னும் கூடுதலாக, வேகமாகத் தொடர்வோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற நம்பிக்கை தமிழ்நாட்டு மக்களைப் போலவே எனக்கும்

## அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு சமச்சீர் வளர்ச்சி! மிகப்பெரிய வாய்ப்புகளைத் தந்த மக்களுக்கு நன்றி!

இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**கடந்த ஐந்தாண்டில் எனது பொறுப்பை சிறப்பாகவே செய்திருக்கிறேன்!**

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் சுயமரியாதை உணர்வும், சமூகநீதியும் பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் இன உணர்வும், மாநில சுயாட்சிக் கொள்கையும் தமிழினத் தலைவர் கலைஞரின் சிறப்பான நிர்வாகமும், தொலைநோக்குப் பார்வையும் கொண்ட திராவிட மாடல் அரசைக் கடந்த ஐந்தாண்டு காலத்தில் சிறப்பாக நடத்திக் காட்டி இருக்கிறோம் என்ற மனநிறைவோடு நான் உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனக்குத் தரப்பட்ட பொறுப்பை மிகச்சிறப்பாகச் செய்ததாகவே நான் நினைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த இருக்கையில் எனக்கு முன்னர் அமர்ந்த பலரும், இன்றைக்கு நம்மிடையே இல்லா விட்டாலும், அவர்கள் அனைவருமே போற்றப்படக் கூடியவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சிச் சக்கரத்தை உயர்த்திப் பிடித்தது மகத்தானது.

தலைமைப் பொறுப்பில் உள்ளோருக்கு பொறுமை, நிதானம், சகிப்புத் தன்மை, கால நேரம் பாராது உழைத்திடும் பண்பு, தீர்க்கமாக முடிவெடுக்கும் திறன், எதையும் தாங்கும் வல்லமை, எல்லோரிடத்திலும் அன்பு, கருணையோடு இருத்தல், கடமை தவறாமை, ஊக்கத்தோடு செயலாற்றுதல் ஆகிய பண்புகள் நிச்சயம் தேவை. இதனையே நானும் கடைப்பிடித்திருக்கிறேன். ஆராய்ந்து முடிவெடுக்கும் பண்பு அந்த முடிவினால் விளையும் பயன் - பயன் பெற்றவர்களின் உயர்வு - உயர்வினால் உண்டாகும் வளம் - வளத்தினால் விளைந்திடும் இன்பம் - இன்பத்தால் கிடைத்திடும் நன்மை - இதுவே நாம் இப்போது காணும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நன்மையே மக்களுக்கு நம்பிக்கையைத் தந்து, நாளைய ஆட்சியாளர்களாக எங்களைத் தொடரச் செய்யப் போகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**அனைவருக்குமான ஆட்சியை தந்திருக்கிறேன் என்பதில் மகிழ்ச்சி!**

இந்த 5 ஆண்டுகளில் பெற்ற அனுபவத்தினால் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், இன்றைக்கு இன்னும் வலிமை பெற்று, தமிழ்நாட்டை இன்னும் ஏற்றம் பெற வைக்க முடியும் என்ற நம்பிக்கையை நான் பெற்றுள்ளேன். நம்பிக்கையோடு இன்னும் உழைக்க வேண்டும் எனும் ஊக்கத்தையும், எதனையும் எதிர்கொள்ளும் வல்லமையையும் பெற்றுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 234 தொகுதிகளையும் என்னுடைய தொகுதிகளாக நினைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுக்கு வாக்களித்தவர்கள், வாக்களிக்காதவர்கள் எனப் பிரித்துப் பார்க்காமல் நான் செயலாற்றி இருக்கிறேன்.

இந்த மிகப்பெரிய வாய்ப்பைத் தந்த தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி மக்களுக்கும் என்னுடைய நன்றிகள். (மேசையைத் தட்டும் ஒலி)

**சட்டப்பேரவையில் கலைஞர் படத்தை திறந்த ராம்நாத் கோவிந்துக்கு நன்றி!**

நூற்றாண்டைக் கடந்து பெருமையோடு இயங்கி வருகிறது இந்தப் பேரவை. கடந்த 2021 ஆம் ஆண்டு, இந்தப் பேரவையினுடைய நூற்றாண்டு விழாவுக்கு வந்து நவீன தமிழ்நாட்டின் சிற்பியான தலைவர் கலைஞர் அவர்களின் படத்தையும் திறந்து வைத்த அன்றைய மாண்புமிகு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இந்த அவையை சிறப்பாக நடத்திய பேரவைத் தலைவருக்கு பாராட்டுகள்!**

மாண்புமிகு ஆளுநருக்கும் எனக்கும் தனிப்பட்ட முறையில் எந்தவிதக் கருத்து வேறுபாடும் கிடையாது. தமிழர்களுடைய சுயமரியாதை எள் முனையளவு சீண்டப்பட்டாலும், அது யாராக இருந்தாலும், எதிர்க்குரல் கொடுக்கும் திசையில் முதல் நபராக நான் இருப்பேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர் பண்பாட்டை மனதில்கொண்டு, மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

> **“பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் சுயமரியாதை உணர்வும், சமூகநீதியும் பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் இன உணர்வும், மாநில சுயாட்சிக் கொள்கையும் தமிழினத் தலைவர் கலைஞரின் சிறப்பான நிர்வாகமும், தொலைநோக்குப் பார்வையும் கொண்ட திராவிட மாடல் அரசைக் கடந்த ஐந்தாண்டு காலத்தில் சிறப்பாக நடத்திக்காட்டி இருக்கிறோம் என்ற மன நிறைவோடு நான் உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனக்குத் தரப்பட்ட பொறுப்பை மிகச் சிறப்பாகச் செய்ததாகவே நான் நினைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)”**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டுகளில் பேரவைத் தலைவராகப் பணியாற்றும்

## நிதிநிலையைக் காரணம் காட்டி எதையும் செய்யாமல் இல்லை! ‘திராவிட மாடல்’ அரசை சிறப்பாக நடத்தியுள்ளோம் என்ற மனநிறைவு!

நீங்கள் அமைதியாகவும், கண்ணியத்தோடும் அதேநேரத்தில் கட்டுப்பாட்டோடும் தங்களுடைய ஆற்றலால் இந்தப் பேரவையைச் சிறப்பாக நடத்திச் சென்றிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக என்னுடைய பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்வதோடு, இந்தப் பேரவையில் பெரும்பான்மை இடம்பெற்றுள்ள கட்சியின் தலைவர் என்கிற முறையில் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்களுக்குத் துணையாக நின்று, பேரவையின் துணைத் தலைமைப் பொறுப்பை ஏற்று, அமைதியாக, சிறப்பாகப் பேரவையை நடத்தும் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுகள், நன்றிகள். (மேசையைத் தட்டும் ஒலி)

**அனுபவமிக்க அண்ணன் துரைமுருகன் விரைவில் குணம் பெற்று வர வேண்டுகிறேன்!**

இப்பேரவையில் அனல் பறக்கும் விவாதம் நடைபெறக்கூடிய நேரத்தில், கருத்து மோதல்களை எதிர்கொண்டு, கட்சி வேறுபாடுகள் வெளிப்படுகையில் தன்னுடைய அனுபவத்தினாலும், அபார நினைவாற்றலாலும் அமைதிப்படுத்தக்கூடியவர், பேரவையின் மூத்த உறுப்பினர் அவை முன்னவர் என்னுடைய ஆருயிர் அண்ணன் துரைமுருகன் அவர்கள். அவர் தற்போது இடுப்பு எலும்பு முறிவு ஏற்பட்டு அறுவை சிகிச்சை செய்து கொண்டு மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அவர் விரைந்து உடல்நலம் பெற்று வர வேண்டும் என்று விரும்புகிறேன். அவருக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றிகள். (மேசையைத் தட்டும் ஒலி)

பாராட்டக்கூடிய வகையில் பணியாற்றும் அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும் என்னுடைய நன்றிகள்.

மக்கள் பணியானாலும் சரி; வந்த, வருகின்ற தேர்தல் பணிகளானாலும் சரி; என்னில் ஒரு பாதியாய், இயக்கத்தின் வளர்ச்சிக்கும், ஆட்சியின் சிறப்பிற்கும் உறுதுணையாக நிற்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுகள், நன்றிகள். (மேசையைத் தட்டும் ஒலி)

முக்கியமாக பல்வேறு திட்டங்களை நாங்கள் உருவாக்கினாலும், அவை சிந்தாமல் சிதறாமல் மக்களிடம் சென்றடைவதற்கு முழு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றி!**

“குறைகளைச் சொல்பவர்கள் நம் முன்னேற்றத்திற்குச் சிறகுகளைத் தரக் கூடியவர்கள்” என எண்ணிச் செயலாற்றுபவன் நான். அரசுக்குத் தக்க யோசனைகளைக் கூறுவதிலும், குறைகளைச் சுட்டிக்காட்டு வதிலும், கண்ணியமான முறையைக் கடைப்பிடித்து, ஒத்துழைப்பு நல்கிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு வரவில்லை. இருந்தாலும், அவருக்கும், மற்றுமுள்ள கட்சித் தலைவர்களுக்கும், எங்கள் சாதனைகளுக்கெல்லாம் தோளோடு தோள் நின்ற தோழமைக் கட்சித் தலைவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்றில்லாமல், அன்போடும் பாசத்தோடும், என்றென்றும் என்னிடத்திலே உரிமையோடு அன்புகாட்டி வரும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 16ஆவது சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுடன் முதலமைச்சர் என்ற முறையில் இணைந்து பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றமைக்காக நான் பெருமிதம் அடைகிறேன். இந்த அரசு சிறப்பாகச் செயல்படுவதற்கு அனைத்து வகைகளிலும் துணைநின்ற தலைமைச் செய லாளர் உள்ளிட்ட அனைத்துத் துறைச் செயலாளர்களுக்கும், காவல் துறை அலுவலர்களுக்கும், அடுத்த நிலையில் உள்ள அதிகாரிகளுக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் என்னுடைய நன்றிகளை உரித்தாக்குகிறேன். ஒவ்வொரு துறையிலும் இருந்து வருகிற கோப்புகளை எனக்குச் சமர்ப்பித்து, அனுமதி பெற்று, அத்திட்டங்களைக் கண்காணிக்கும் என்னுடைய செயலாளர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்பேரவை மிகச்சிறப்பாக நடைபெற கடந்த 5 ஆண்டுகளாகப் பாராட்டக் கூடிய வகையில் பணியாற்றும் நம்முடைய பேரவை முதன்மைச் செயலாளர் அவர்களுக்கும், பேரவையினுடைய அலுவலர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசை யைத் தட்டும் ஒலி)

**பத்திரிகை – ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் நன்றி!**

பேரவையினுடைய செய்திகளை உடனுக்குடன் வெளியிட்டு, உறுப்பினர்களை உற்சாகப்படுத்தி இருக்கக்கூடிய பத்திரிகையாளர்கள், ஊடகத் துறையைச் சார்ந்த நண்பர்கள் அனைவருக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தொடர்ச்சி 4ஆம் பக்கம்